# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (06.02.2016 முதல் 10.02.2016)

**அறிக்கை எண் : 011/2016** **தேதி: 05.02.2016**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 19°செ முதல் 23°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 09°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் ( 03.02.2016 முதல் 07.02.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 38 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06-02-16 | 0 | 32 | 19 | 5 | 68 | 24 | 10 | கிழக்கு |
| 07-02-16 | 0 | 32 | 19 | 5 | 69 | 25 | 10 | கிழக்கு |
| 08-02-16 | 0 | 32 | 19 | 5 | 70 | 26 | 10 | கிழக்கு |
| 09-02-16 | 0 | 32 | 19 | 5 | 71 | 27 | 10 | கிழக்கு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10-02-16 | 0 | 32 | 19 | 5 | 72 | 28 | 10 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ நிலவும் குளிர் வானிலையை கருத்தில் கொண்டு கோடை கால திராட்சை பழ அறுவடைக்கு உடனடியாக கவாத்து செய்யவும்.
- ✓ நிலவும் குறைந்த பட்ச வெப்பநிலை 20$^{0}$ செல்சியஸ் ஆகவும் மற்றும் அதிகாலை ஈரப்பதம் உயர்வாக காணப்படுவதால் திராட்சையில் சாம்பல் மற்றும் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. சாம்பல் நோயை கட்டுப்படுத்த 0.3 சதவிகிதம் நனையும் கந்தகத் தூளை தெளிக்கவும். அடிச்சாம்பல் நோயை கட்டுப்படுத்த ஒரு சதவிகிதம் போர்டோ கலவையை தெளிக்கவும்.
- ✓ அதிகபட்ச வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் மல்லிகையில் மொட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த 2 மில்லி மோனோகுரோட்டோபாஸ் 26 டபிள்யூ. எஸ். சி (WSC) என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ குறைந்தபட்ச வெப்பநிலை இந்த வாரத்திலும் தொடர்ந்து குறைவாக காணப்படுவதால் நவரைப்பருவ நெல் நாற்றாங்காலில் குலை நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. தாக்குதல் தென்பட்டால் 25 மிலி எடிபன்பாஸ் (Ediphenphos) 50 ஈ.சி என்ற மருந்தனை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து 20 சென்ட் அளவுள்ள நாற்றாங்காலுக்கு தெளிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ நவரைப்பருவ நெல் நாற்றாங்காலில் குலை நோய் தாக்குதல் தென்பட்டால் 25 மிலி எடிபன்பாஸ் 50 ஈ.சி மருந்தனை 40 லி நீரில் கலந்து 20 சென்ட் அளவுள்ள நாற்றாங்காலுக்கு தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.